ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

ஒவ்வொருவஸ்துக்களேயும்வேறுபடுத்தித்தெரிந்துகொள்ளுவதற்காகவே லக்ஷணம் கூறப்படுகின்றது. ஒரே லக்ஷணம்வாய்ந்த அனேக வியக்திகள் ஒரேகாலத்திலும் தேசத்திலுமிருந்தாலும், வேறுகாலத்திலும் தேசத்திலுமிருந்தாலும் அவை ஒரே ஜாதியுடையனவாம். உதாரணமாக ஒரே லக்ஷண உருவிங்கொண்ட குடங்கள் குடத்தன்மையென்ற ஒரேஜாதியுடையனவாக எத்தேசத்திலும் எக்காலத்திலும் வியவஹரிக்கப்படுகின்றனவல்லவா; ஒரேஜாதியுள்ள வஸ்துக்கள் இரண்டு சேர்ந்தால் ஒரு கெடுதியும் நேரிடாது குணமே கிடைக்கும். ஒரு பாத்திரத்தில் கொண்டுவந்த கங்காதீர்த்தத்தை வேறு பாத்திரத்தில் கொண்டுவந்ததோடுசேர்த்து ஒருபெரிய பாத்திரத்தில் வைத்திருந்தால் எவ்வளவு நாளானுலும் கெடாது. அதே கங்காதீர்த்தமாகவே இருக்கும். இரண்டும் ஜலத்தன்மையெனுமொரே ஜாதியுள்ளது. வேறுஜாதியுள்ளது தனித்தனியே சுத்தமாயிருப்பினும் இரண்டுசேர்ந்தால் கெட்டுப்போய்விடும். உதாரணமாக- சுத்தமான நல்ல வாஸனையுள்ள ஒரு சந்தனக்கட்டையை கங்காதீர்த்தத்தில் சிலநாள் போட்டு வைத்திருந்தால் இரண்டும் கெட்டுப்போவது பிரத்யக்ஷம். சந்தனக்கட்டை அழுகிப்போகிறது. ஜலம் துர்நாற்றமுடையதாய்விடுகிறது. இதற்குக் காரணம் இரண்டும் வேறுஜாதியாயிருப்பதே. சந்தனக்கட்டை பிருதிவீத்தன்மை ஜாதியுள்ளது. கங்காஜலம் ஜலத்தன்மை ஜாதி வாய்ந்தது. ஒரே ஜாதியிலும் சுத்தமாயுள்ளது. அதேமாதிரி சுத்தமாயிருப்பதோடு சேர்ந்தாத்தான் கெட்டுப்போகாது. ஸௌரத்துப்பன்னீரில் ஜலத்தன்மையிருக்கின்றது. உள்ளிச்சாற்றிலும் அத்தன்மையுளதே. ஆயினும் அவ்விரண்டையும் சேர்த்தால் பன்னீர் கெட்டுப்போகிறது. ஆகவே ஜலத்தன்மையென்றஜாதி பொதுவாய் எல்லாஜலங்களிருந்தாலும் அவைகளின் ஸ்தானுதிபேதங்களுக்குத் தக்கவாறு ஜலத்தினுள் ஜலத்தன்மை என்ற பொதுவான வியாபகஜாதிபோல் வியாப்பியமான ஜாதி அவாந்தர ஜாதிபேதம் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நியாயம் எல்லா பூதலங்களிலும் ஸமமே. அதுபோலவே மானிடவகுப்பிலும் மனுஷ்யத்தன்மை என்ற பொதுவான வியாபகஜாதி இருப்பினும் பிராம்மணத்தன்மை முதலிய அவாந்தரஜாதி பேதமும் அந்த வகுப்பில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஆகவே அந்த மானிட வகுப்பில் ஒரேவிதமான அவாந்தரஜாதியுள்ள இரண்டு வியக்திகள் (ஆண்-பெண்) முறைப்படி சேர்ந்தாற்றான் அதனின்றி உண்டாகும் ஸந்ததி சுத்தமாயிருக்கும். இதற்காகவே ஸ்திரீ புருஷர்களுக்கு விவாஹத்தில் அவாந்தர ஜாதியும் ஒற்றுப்போல் இருக்கவேண்டுமென்று சாஸ்திரங்களில் நியமம் விதிக்கப்படுகிறது. லக்ஷணமும் கூறப்படுகின்றது. அத்தகைய லக்ஷணம் பார்த்து விதிப்படி விவாஹம் செய்து யாவரும் க்ஷேமத்தை அடைவார்களாக. சுபம்!

பத்திராதிபர்.

உ

ஆர்யதர்மம்.

சுக்ல-[illegible]தை-மீ ௨௪௨

# வதூவரலக்ஷணம்.

விவாஹத்தில் வதூவரர்களுக்கு லக்ஷணம் சாஸ்திரங்களிற் கூறப்படுகின்றது. தர்மசாஸ்திரங்களில் சொல்லப்படுவதுபோல் சோதிடசாஸ்திரத்திலும் காணப்படுகின்றது. ஸௌந்தர்யம் முதலிய குணங்கள் திருஷ்டலக்ஷணமாம். ஸௌசீல்யம் ஸௌமனஸ்யம் முதலியனவும் லக்ஷணமாம். வரனுடைய பந்துக்கள் வதூவை வரிப்பதற்காகப் போனபோது காணப்படும் சின்னங்களும் விருத்தி பரீக்ஷையில் தெரிந்துகொள்ளக்கூடிய நிமித்தங்களும் பின்னிட்டு நேரும் சுபாசுப பலன்களை ஸூசிப்பிக்கும் அதிருஷ்டலக்ஷணமாம். இந்த லக்ஷணங்களால் கன்னிகையை பரீக்ஷித்து கிரஹிக்கவேண்டும். லௌகிககாரியங்களுள்ளும், வைதிககாரியங்களுள்ளும் சில காரியங்கள் இதர ஸஹாயமில்லாமலே செய்துவிடலாம். சிலகாரியங்கள் அப்படி முடியாது. ஸஹாயமாகச் சிலரைச் சேர்த்துக்கொண்டேதான் ஆகவேணும். அதிலும் சில காரியங்களில் புருஷருக்குப் புருஷரே ஸஹாயமாகலாம். அத்தியயனாதி காரியங்களில் ஆசாரியன் முதலியவர்கள் உபகாரஞ்செய்கின்றார்களல்லவா. வேறு காரியங்களில் ஸ்திரீகள்தான் ஸஹாயமாய் இருக்கமுடியும். ஔபாஸனம், அக்னிஹோத்ரம், முதலிய காரியங்களில் ஸ்திரீயோடு இருப்பவனுக்குத்தான் அதிகாரம். ஸ்திரீ இல்லாதவன் அதிகாரியல்லவாம். அதனாற்றான் நம் முன்னோர்கள் அந்தகைய வைதிக காரியங்களில் அதிகாரம் பெறுவதற்காக ஒரு ஸ்திரீயை நியமப்படி பாணிக்கிரஹணம் செய்துகொண்டு, அதுமுதல் தனதுஜீவிதகாலபரியந்தம் அவளோடுகூடவே இருந்து, யாகாதிகளைச்செய்து, தேவதைகளை திருப்திசெய்துவைத்து, அவ்வாறு திருப்தி அடைந்த தேவர்களது அனுக்கிரஹத்தால் எற்பட்ட ஒழுங்கான மழைமாரிகளால் தான்யாதிபலன்களை இம்மையிலும் ஸ்வர்க்காதிகளை மறுமையிலும் அடைந்துவர்

தார்கள். விவாஹ விதிப்படி கன்னிகையை விவாஹம்செய்து கொண்டவன்தான் பூர்ண மனுஷ்யனாம். அப்படியில்லாதவன் பாதிபாகத்தில் சூன்யனாமென்று பிருஹதாரண்யக சுருதி கூறுகின்றது. தைத்ரீயசுருதியும் பத்தினி, பர்த்தாவின் பாதிபாகம் என்று போதிக்கின்றது. அப்படி பத்தினியால் பூர்ணனானவன் அவளை ஒரு பொழுதும் விலக்கிவிடக்கூடாது. அவளுமவனை விட்டு விலகக்கூடாது. எப்பொழுதும் அந்த தம்பதிகள் அன்யோன்யம் அன்புமிகுந்தவர்களாய் இருக்கவேண்டும். லௌகிக விஷயங்களுள் மிகுந்த அன்பைபாராட்ட பத்தினிபோல் வேறொரு விஷயமுமில்லை இது காமசாஸ்திரத்தில் பிரஸித்தமாயுள்ளது. அடிக்கடி ஸ்திரீபுருஷர்கள் ஒருவரையொருவர் ரத்து செய்துவிட்டு புதிதுபுதிதாக மற்றொருவரைச் சேர்த்துக்கொண்டு வருவார்களானால் அப்பொழுது பரஸ்பரம் அன்பு உண்டாகுமா? நம்பிக்கைத்தான் இருக்குமா? கொஞ்சநாள் சேர்ந்திருந்துவிட்டுப் பிறகு ரத்து செய்துப் பிரிந்துவிடுவோமென்ற எண்ணத்துடன் இருப்பார்களானால் தேடிவைத்தசொத்தில்எதைக்கொண்டுபோய் விடுவாளோ! என்ன செய்துவிடுவாளோ! என்ற கவலை அவநம்பிக்கைக்குக் காரணமாகுமேயன்றி அன்பு பாராட்ட இடங்கொடுக்குமா! பூர்வபுண்ணியவசத்தினால் முதல் முதலில் எந்த ஸ்திரீ புருஷர்கள் ஒன்று சேர்ந்து பூர்ணர்களானார்களோ, அவர்கள் பிரிந்துவிட்டால் மற்றோரிடத்தல் சோத்தகுதியற்றவர்களாய் விடுவார்கள். தைவவசத்தால் உற்பத்தியிலேயே ஒன்று சேர்க்கப் பட்ட தேங்காய் உடைக்கப்படாமல் பூர்ணமாகவே இருந்தால் உள் ரஸமிருப்பினும் இல்லாவிடினும் கெட்டுப்போகாமலிருக்கும். கொப்பரையாகவே நெடுநாளிருக்கும். உடைக்கப்பட்டு பிரிக்கப் பட்டுவிட்டால் அது அழுகிக்கெட்டுப்போம். ஒருதேங்காயின் ஒரு மூடியை மற்றொரு தேங்காயின் வேறு மூடியோடு சேர்த்தாலும் அது பூர்ணமாகாது. இடையில் தொரப்புள்ளதாயிருக்குமாதலால் கெட்டேபோய்விடும். அதனால் விவாஹம்செய்துகொண்டவர்கள் இஷ்டப்படாவிடில் விவாஹரத்து செய்துகொண்டுவிடலாமென்பதாதி வாதங்கள் உலகத்திற்கு க்ஷேமகரங்களல்ல. ஆகையால் நல்ல லக்ஷணம்பார்த்து விவாஹம் செய்துகொண்டு தம்பதிகள் இணைபிரியாமல் நீடுழி வாழ்வார்களாக. சுபம்!

பத்திராதிபர்.

# அகிலபுவன திருப்புகழ் மஹாநாடு.

1. சேலம்ஜில்லா ஆத்தூர்தாலூகா ஆனையாம்பட்டி என்னும் தேவகுஞ்சாபுரி க்ஷேத்திரத்தில் ஸ்ரீ முருகன் தைபுஷ்ய திருக்கல்யாண சபையின் ஆதரவின் கீழ் சுக்லஸு தைமீ 2உ (15-1-30) மாலை 4-மணிக்கு ஸ்ரீ தேவகுஞ்சாபுரி அப்பன் சன்னிதியில் அகிலபுவன திருப்புகழ் மஹாநாட்டுக் கூட்டுறவுச்சங்கம் கூடப்பட்டது. ஆஜர் மெம்பர்கள் சுமார் 1000.

2. மஹாநாட்டு நடவடிக்கைகள்.— ப்ரம்மஸ்ரீ சேங்காலிபுரம் S. V. நடராஜய்யர் அவர்கள் ப்ரசங்கம்: ஸ்ரீமுருகனுடைய ஆக்ஞையை சிரமேல்கொண்ட நாம் எல்லாதர்மங்களையும் பாதுகாக்கும் காரணமாக திருப்புகழ்சபைகளை ஆங்காங்கு ஏற்படுத்தி ஸ்ரீ முருகனுடைய பக்தி அபிவிருத்தி அடையவும், இந்த மதக்கூட்டுறவின் இயக்கம் எந்நாளும் தளர்ச்சி அடையாமல் இருக்கவும் இம் மஹாநாட்டின்சார்பாக ஸ்ரீ தேவகுஞ்சாபுரி அப்பன்சன்னிதானத்தில் பக்திச்சுவை பெருகச்செய்த ப்ரசங்கத்தின் தீர்மானம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

3. ப்ரசங்கபானு சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகள் அவர்கள் ஆதரித்துப் பேசினார்.

4. இதரபக்திமான்களின் பிரசங்கமும் நடைபெற்றது.

5. ஆனையாம்பட்டி திருப்புகழ் சபைக்காக:—

1, ப்ரம்மஸ்ரீ R. முத்துஸாமி அய்யாவர்கள் பிரசிடெண்டு.

2. மகா-ள-ஸ்ரீ பிடில் நாராயணபாகவதாவர்கள் வைஸ்பிரசிடெண்டு.

3. மகா-ள-ஸ்ரீ மைசூர் சமஸ்தானம் வித்வான் ஜலதரங்கம் A. R. சுப்பய்யர் அவர்கள், மகா-ள-ஸ்ரீ கர்ணம் C. N. ஆதிசேஷய்யர் அவர்கள் செகிரிடரிகள்.

இவ்விதமாக ஸ்ரீ தேவகுஞ்சாபுரி அப்பன் கிருபையைமுன்னிட்டு ஷை மஹாநாடு ஆண்டவன் சன்னதியில் நடைபெற்றுமுடிவுற்றது.

C. N. ஆதிசேஷய்யர்,
செக்ரிடரி.

தேவகுஞ்சாபுரி என்னும் க்ஷேத்திரத்தில் பிரம்மஸ்ரீ
பிரசங்கபானு ஸ்ரீவைத்தினாதசாஸ்திரிகள்
செய்தது.

# ராஜவிளம்பரம்.

1. இந்து மதத்தின் சாஸ்வதமானக்ஷேமத்தையும் 2. ஜாதிதர்மாசாராதிகளையும், (3) இந்துமஹாஜனங்களின் ஒற்றுமையையும் மேன்மையையும் எப்பொழுதும்கூடுமானவரையில்பாதுகாக்க நான் ஸஹாயமர்க உடன்படுகிறேன்.

இந்த விஷயத்தில் மூன்று தீர்மானங்கள்:—

1. இப்போது நாம் அனுஷ்டித்துவரும் கொள்கைகளையும் விசுவாஸங்களையும் சிதைப்பதில் வெகு ஊக்கமாய் துணைநிற்கும் நாஸ்திகர்களும் ஸ்வயேச்சயாய் திரிபவர்களுமே இந்துக்களாகிய நமது விரோதிகள். வித்யாபிவிருத்திக்கும் ராஜவிசுவாசத்திற்கும் மதமே காரணமானதால் இந்துக்களால் நடத்தப்படும் பாடசாலைகளை நிலைநிறுத்தவும் நிரீசுவரவாதமாய்உள்ள படிப்புப் பத்திரிகைகளைத் தடுக்கவும் கட்டுப்படவேண்டியது. இதுதான் இந்துக்களின் முதலாவது கொள்கை

2. வர்ணாசிரமதர்மங்களையும் அவற்றிற்குரிய ஸ்வதந்திரங்களையும் பாதுகாப்பதே. அதாவது இக்காலத்தில் கேட்பாற்று சுயேச்சையாய்த் திரியும் சீர்மாற்றக்காரரும், கம்பிலிகற்றுணபிரஷ்டத்வம்அடைந்தவர்களும், பாதிரிகளும், அவர் ஸைங்யங்களும் அன்னியதேசத்தாரின் திருப்தி ஒன்றே புருஷார்த்தமாகஎண்ணி நடந்துவரும் சிலநம் நேர்நேராகவோ அல்லது தந்திரமாகவேர் எதிர்த்து ஞாபகத்திலும் உபத்திரவித்துவருவதாகிய தடைகளை ஒழித்து இந்துமஹாசமூஹக் கொள்கைகளை நிலைநிறுத்துவதே இந்துசபைகளைச் சேர்ந்தவர்களின் கடமையாக இருக்கும்படி செய்வது இந்துக்களின் இரண்டாவது கடமை.

3. இந்துமஹாஸமூஹத்தின் ஒற்றுமையையும் பலத்தையும் குறைப்பதும் அல்லது நழுவச்செய்வதும் அதின் சாசுவதமான கீர்த்தியை உலகத்தார்முன் தாழ்த்துவதுமாகிய எந்த ப்ரயத்னத்திற்தும் எதிர்ப்பதே ஹிந்துக்களின் மூன்றாவது கருத்து.

ஆதலால் ஹிந்துக்களின் மதஸம்மந்தமான ஆசாரா திவிஷயமாகவோ க்ஷாத்திரியவிஷயமாகவோ உள்ள எந்த விஷயத்திலாகிலும் ஆங்கிலேயராஜாங்கத்தார் சட்டங்கள் நிர்மாணிக்காமலிருக்க இந்துக்கள் தடுக்கக் கடமைப்படுகிறார்கள்.

C. N. ஆதிசேஷய்யர்,
செகிரிடரி.

---

## டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் கூற்று.

(24-வது பக்கத்தொடர்ச்சி)

இவர் சொல்லும் விஷயம் சாஸ்திரரீதியில் சரியல்லவென்பது ஓர்புரமிருக்கட்டும். லௌகிகத்திற்காகவாவது ஒத்துவருமா என்று பார்ப்போம். இனி இவர் கூற்றை முதலில் விவரிக்கிறேன்.

"ஹிந்து ஸமூஹத்தில் இளவயதுள்ள குழந்தை எப்போதும் விதவைகளாக இருக்கவேண்டுமென்று ஸநாதனதர்மம் முக்கிய கொள்கைகளில் ஒன்றாக இருக்கமுடியாது" என்று முதல் வாக்கியம்.

இதை லௌகிகர்களே கவனிக்கட்டும். எந்த ஸமூஹத்திலாவது இளவயதுள்ள குழந்தை விதவையாக இருக்கவேண்டுமென்று சொல்லமுடியுமா. அப்படிக்கூறினால் யாராவது கேட்பாரா அப்படிக்கூறினால் அது ஸநாதனதர்மமாகுமா. எது ஸநாதன தர்மமோ அது ஸநாதனம்தான். எது ஸமயம்தோறும் மாறுமோ அது ஸநாதனமாகாது. ஸநாதனம் என்றால் எப்போதும் ஒரே மாதிரி மாறாமலிருப்பதென்று பொருள். இந்த அர்த்தம் தெரிந்திருந்தால் டாக்டர் இவ்விதம் கூற முன்வந்திருக்கமாட்டார். நம் ஸநாதனதர்மசாஸ்திரக்காரர் காலத்திற்குத் தக்கபடி மாறுகிற தர்மத்தைப் பொதுவாய்க் கூறமாட்டார்கள். ஆனால் யுகபேதத்தினால் அந்தந்த தர்மத்தில் இவ்வளவுமட்டும் அனுஷ்டித்தாகவேண்டும் என்று கூறியிருக்கிறார். அதில் கலியில் இவ்விதமனுஷ்டிக்கலாம் என்றுகூறியிருக்கிறார். அவ்வனுஷ்டானம் செய்பவர்கள் 100-க்கு ஒருவராவது இருப்பார். மற்றவர்களாலும் அனுஷ்டிக்கமுடியுமாயினும் அசிரத்தை முதலிய தோஷத்தால் அனுஷ்டிக்காமல் விட்டதைக்கொண்டு இது அனுஷ்டிக்கமுடியாது. ஆகையால் அந்தசாஸ்திரம் நமக்கு வேண்டாமென்று கூறுவது அழகாகுமா. ஆகவே

டாக்டர் கூற்று வைத்தியத்திற்குதவாது. அடுத்த வார்த்தையை கவனிப்போம். 14-வயதுகுட்பட்ட பால்யவிதவைகள் நமது நாட்டில் இப்போது ஆயிரக்கணக்காக இருக்கின்றனர். பால்யவிவாஹம் செய்யும் வழக்கத்தை வைதிகர்கள் கைக்கொண்டிருப்பதனால்தான் இந்தப்பலன் ஏற்பட்டிருக்கிறதென்கிறார். வைதிகர்கள் பால்யவிவாஹம் செய்யும் வழக்கத்தைக் கைக்கொண்டிருப்பது உண்மை. வைதிகன் என்றால் வேதத்திற் கூறியதைச் செய்பவன் என்று பொருள். வேதத்திற்கூறியதை தள்ளுபவன் அவைதிகன் எனப்படும், ஆகவே வைதிகர்கள் செய்வதை வேண்டாமென்று தடுத்தால் அது ,அவைதிகனின் கார்யமாகுமென்பதை டாக்டர் அறியவேண்டும். மற்று 14-வயதுக்குட்பட்ட விதவைகள் ஆயிரக்கணக்காய் இப்போது இருப்பதாய்க் கூறுகின்றார். இருக்கட்டும். இதனாலென்ன. இவ்விதம்செய்த முன்னோர்கள் இரக்கமற்றவர்களாய் இருக்கவேண்டுமென்றும் டாக்டர் மனதுக்கிப்போது பிடிக்காததால் இதைக்கொண்டு இவரது முன்னோர்கள் இரக்கமற்றவர்களென்று வைதால் அவர்களது ஸந்ததியிற்பிறந்ததன்னை எவ்விதம் அதிலிருந்து விலக்கிக்கொள்வாரோ தெரியவில்லை. இருக்கட்டும். இனி இவரையே கேட்போம். 14-வயதுகுட்பட்ட விதவைகள் இருப்பதுதான் கஷ்டமோ. அதற்குமேற்பட்ட விதவைகளை உலகமேற்குமோ. சாரதாசட்டத்தால் இந்தத்தொல்லை தீர்ந்ததென்றதற்கப்புரம் வைதவ்யமேற்படாதோ. உத்தமமான சாரதாசட்டம் அப்புறம் ஏற்படும் வைதவ்யத்தைப் போக்கிவிடக் கூடிய மருந்தென்று டாக்டர் பிரசுரம் செய்வாரா. 14-வது வயதில் விவாஹம் செய்ததினத்தன்றே அடுத்தோ அவனின் புருஷன் இறக்கவேமாட்டானென்று டாக்டர் எந்த ஸூக்ஷ்மத்தால் கண்டார். இது தடைமருந்தல்ல, ஆகவே அங்கு கல்யாணம் செய்தவுடன் புருஷனிறந்துவிட்டால் அத்தகைய ஸ்திரீகளும் உலகசுகமறியாதவர்கள்தான். பிறகு அவர்களைக்குறித்தும் டாக்டர் கண்ணீர்பெருக விடுவார். உடனே சாரதாசட்டம் வரும். அப்போது டாக்டர் அதில்லாமற்போனால் உலகம் கெட்டுவிடும் என்றும் தன் பெரியோர்கள் கருணையற்றவர்களென்றும் வசவிக்காரம்பிப்பார்.

பெண் ஒன்றுமறியாத சிறுமியாய் இருந்து வைதவ்யமடைந்தாலும் அவளுக்கு மறுமணம் கூடாதாம். புருஷன் எவ்வளவு வயதாயினும் மறுமணம் செய்துகொள்ளலாம் என்று பரிஹஸிக்

கிறார். சாஸ்திரம் இன்னதென்று அறியாத இவர் கண்டபடி எல்லாம் பேசுவதற்கு வாம்புகிடையாது. பெண்ணுக்கு வயதுவந்த பிறகுதான் கல்யாணம் செய்யவேண்டுமோ. அப்படிச்செய்தால் அதன் குணமென்ன. அதில் கெடுதல் அதிகம் விளையுமா? நன்மை உண்டாமாவென்று ஆலோசிக்கமுடியாமல் போயிற்றே. அவள் இஷ்டம் வந்து கல்யாணம் செய்துகொள்ளும் தேசத்தார் நம் விவாகத்தைப்பற்றி புகழ்ந்து வால்யம் வால்யமாய்எழுதும் டாக்டர்களின் புத்தகத்தைக் கூட நம் டாக்டருக்கு பார்க்கமுடியாமலிருக்கும்போது சாஸ்திரஆராய்ச்சி இவருக்கு எங்கிருந்துவரும். அவ்வால்யங்களின் விஷயத்தையும் அந்த மேற்றிசை டாக்டர்களின் பெயரையும் உண்மையில் அறிய ஆவலுள்ளவரானால் யூ. பி. கிருஷ்ணமாசாரியாரைக் கேட்டுக்கொள்ளட்டும். ஆனால் உண்மையில் அறியவிருப்பமுள்ளவரானால் அவரிருக்குமிடத்திலுள்ளவர்களிடமிருந்தே தெரிந்துகொள்ளலாம். வீணில் தம்பெரியோர்களைக் காரணமின்றி திட்டுவதற்கு ஸங்கல்பம்கொண்டிருப்பதாலும் பத்திரிகையும் அவரது கூற்றுக்கு விசாலமாய் இடம் தருவதாலும் எவ்வளவேண்டுமானாலும் பேசுவார். பிறகு புருடர் எவ்வளவு வயதானாலும் கல்யாணம் செய்துகொள்ளலாமாம என்கிறார். இது சாஸ்திரமல்ல. 50-வயதுக்குமேல் விவாஹம் செய்துகொள்ளக் கூடாதென்று தடுத்திருக்கிறார்கள். புருஷர்களுக்குத்தான் அவ்வளவு ஸ்வாதந்திரியமும் ஸ்திரீகளுக்கு அது இல்லையென்றும் தான் ஏன் வைத்தார்களெனலாம். இதற்கு பதில் விரிவாய் அடுத்த வியாஸத்திற் கூறுவாம்.

1. ஹிந்துமதம் நாளுக்குநாள் அபிவிருத்தி அடைந்துவரவில்லை. 2. அதற்கு மாறாக நாளுக்குநாள் ஹிந்துக்களின் தொகை குறைந்து வருகிறது 3. நம்மால் 300-பெயர்களுக்கு அதிகமாக பிரதிதினமும் வேறுமதத்தில் சேர்ந்து வருகிறார்கள். 4. அவர்கள் நம்மைச் சார்ந்தவர்களாக இருந்தும் நாம் அவர்களை மதத்தின் பெயரால் தீண்டாதவர்களாகக் கருதுகிறோம். 5. அதற்காக வைதிக கோஷ்டியார் ஒரு நன்மையும் செய்ததில்லை. 6. நந்தனைப் பற்றியும் திருப்பணாழ்வாரைப்பற்றியும் சதா பேசிக்கொண்டுமவர்களின் திருநாமங்களை உச்சரித்துக்கொண்டிருந்தாலும் அவர்கள் பிறந்த குலத்தை அழித்து வருகிறார்கள் என்கிறார். இதை விசாரிப்பாம்.

(தொடரும்.)

N. M. சுப்பிரமணிய சாஸ்திரி,

திருஷ்டம், அதிருஷ்டம், என இருவிதமாக இருப்பதுபோலவே மானஸ வ்யபிசாரதோஷமும் கூட திருஷ்டாதிருஷ்டரூபமாக இருவிதமாகும். இவற்றுள் திருஷ்ட மானஸ வ்யபிசாரதோஷமாவது பரபுருஷனை ஆசையுடன் அடிக்கடி அநுஸந்தானம் பண்ணிக்கொண்டிருக்கும் ஸ்திரீகளுடைய சோணிதமென்ற வீர்யமானது ஸம்போகத்திலாசையுள்ள மனிதனின் வேகத்தால் கலக்கத்தை அடைந்து தன்னிருப்பிடமாகிய ஹிருதயதேசத்தினின்றும் வெளிப்படுவதற்கு ஆரம்பிப்பதுதான். ஸ்திரீகளுடைய சோணிதம் அநுராகத்தாலும் வெளிப்பட்டு விடுமென்பது "ஸ்திரீகளுடைய வீர்யமானது ர்கத்தாலும், ரோகத்தாலும், தாதுக்களாலும், காலவிசேஷத்தாலும் வெளிப்பட்டுவிடுவதால் ஸ்திரீகளின்சோணிதம் நான்குவிதமாகும்" என்ற ஸ்மிருதியாலும் அறியப்படுகின்றது. சரகமென்ற வைத்தியசாஸ்திர கிரந்தத்தை இயற்றிய பதஞ்சலி மகாமுனிவரும், "போகத்தில் அதிக ஆசையாலும், அதனுலுண்டாகிய அநுராகத்தாலும், மனதால் "மைதுனம்" முதலிய வைகளை ஸங்கல்பவடிவமாக அநுஷ்டிப்பதாலும், ஸ்திரீகளின் ரஜஸ் கலக்கத்தை அடைந்து அப்படிப்பட்ட ஸங்கல்பத்தால் சரீரத்தில் ஜனித்திருக்கும் உஷ்ணத்தால் தன்னிருப்பிடமாகிய ஹிருதயதேசத்தினின்றும் வெளிக்கிளம்பி சரீரம் முழுவதும் "ரஸம்" என்ற பதார்த்தம்போல தங்குமிடமின்றி ஸஞ்சரித்துவிட்டு முடிவில் அக்னியிலிட்ட ஆஜ்யதாரைபோல் காமாக்னியில் லயத்தை அடைகின்றது" என்று ராகத்தாலும்ஸ்திரீகளுக்கு ரஜோநிர்க்கமம் ஸம்பவிக்கும் என்று பகன்றூர். இரண்டாவதாகிய அதிருஷ்ட மானஸ வ்யபிசாரதோஷமாவது– சாஸ்திரத்தால் நிஷேதிக்கப்பட்ட அந்த வ்யபிசாரத்தால் உண்டானதும் ச்ரௌத ஸ்மார்த்தாதி கர்மாக்களிலும், போஜனம், விவாஹம் முதலிய வ்யவஹாரங்களிலும் அதிகாரத்தை அழிக்கக்கூடியதும் சாஸ்திரமாத்திரத்தால் அறியக்கூடியதுமாகிய பாபவிசேஷமேயாகும். இவ்விரண்டிற்குள் முதலாவதாகிய திருஷ்ட மானஸ வ்யபிசார தோஷந்தான் ரஜோநிர்கமத்தால், நிவர்த்தித்து விடுமேயன்றி இரண்டாவதாகிய அதிருஷ்ட மானஸ வ்யபிசாரதோஷமும் ரஜோநிர்கமத்தால் நிவர்த்தித்துவிடாது. அதிருஷ்ட மானஸவ்யபிசார தோஷமோவென்றால், வஸிஷ்டபகவானுல் இருபத்தொன்றுவது அத்தியாயத்தில் விதிக்கப்பட்டிருக்கும் நான்கு தினங்களால்

செய்யக்கூடிய ப்ராயச்சித்தத்தை அனுஷ்டிப்பதால்தான் விலக வேண்டும். ஆகவே திருஷ்ட மானஸ வ்யபிசாரதோஷம் ரஜோ நிர்கமத்தாலும், அதிருஷ்ட அத்தகையதோஷம், ப்ராயச்சித்தானுஷ்டானத்தாலும், விலகுமென்றுதான் வஸிஷ்டபகவானின் அப்பிப்ராயம். உலகத்திலும், பிறருடைய திரவ்யங்களை நியாயமின்றி அபஹரித்துக்கொண்டுபோகும் திருடர்களுக்கும், தம்மால் திருட்டுத்தனமாகக் கொண்டுபோகப்பட்ட வஸ்துக்களை திருப்பிக்கொடுத்துவிட்ட மாத்திரத்தால் சுத்தி எற்பட்டுவிட்டதாகக் கூறுவதில்லை. அந்த வஸ்துக்களை திருப்பிக்கொடுத்துவிட்டபோதிலும், அவனுடைய அபராதத்திற்கு அனுகுணமாக அரசாங்கத்தில்தண்டனையும் அவர்களுக்குவிதிக்கப்படுகின்றதன்றோ! (அதுபோல் பரபுருஷனுடைய வீர்யம், கர்ப்பம், இவைகளைத் திருட்டுத் தனமாக தன்னிடமடக்கம் செய்துகொண்டிருக்கும் ஸ்திரீகளுக்கும் அவ்விருவஸ்துக்களை வெளிப்படும்படி செய்வதால் மட்டிலும் சுத்தியேற்படமாட்டாது. அவ்விததோஷத்திற்காக ப்ராயச்சித்தமும் அவசியமாகும் என்று இங்கு கருத்து) ஆகவே சிலர் இவ்வஸிஷ்ட ஸ்மிருதிவசனங்களைப்போன்றஸ்மிருதிவசனங்களை சிரேஷ்டப் பிரமாணமாக அவலம்பித்துக்கொண்டு ஸ்திரீகளுக்கு ஸகல விஷயங்களிலும் புருஷர்களைப்போல் ஸ்வதந்திரசஞ்சாரம் என்பது சாஸ்திரீயந்தானென்று சாஸ்திராநுசாரமாகவும் அதை ஸ்தாபனம் செய்துவிட வேண்டுமென்ற தீர்மானத்துடன் எல்லா ஸ்மிருதிவசனங்களுக்கும் விருத்தார்த்தத்தை தத்வார்த்தம் என்றுகூறிசாஸ்திரார்த்தத்தையேகெடுத்துவிடுகின்றார்கள். அனாதிகாலமாக ஏற்பட்டுள்ள ஸநாதனதர்மமென்னும் அணையையும் அறவே உடைத்துவிடுவதற்கு உத்ஸாகத்தை அடைகின்றனர்.

அன்றியும் மற்றும் சிலர் கூறுவதாவது. "ஆதிகாலத்தில் ஸ்திரீகளுக்கு எல்லாவிஷயங்களிலும், ஸ்வதந்திரமாகவே பிரசாரம் இருந்ததாகத் தெரிகின்றது. அந்தகாலத்தில் ஸ்திரீகளெல்லோரும் தம்தம் இஷ்டப்படித் தமக்குவந்த புருஷனைக் கணவனாக ஸ்வயம்வர நியாயத்தால் கலியாணம் செய்துகொண்டு ஸுகமாகவே வாழ்ந்துவந்தார்கள். இவ்வண்ணமாகவே அனேகநூற்றாண்டுகள் சென்றவுடன், நமது முன்னோர்களாகிய பிராமணர்கள் காலவிசேஷமறிமையால் அத்தகைய ஸ்வதந்திர பிரசாரத்தையுங்கூட பதிவ்ரதாதர்மத்திற்கு விருத்தமென்றும், வ்யபிசாரதோஷம்ஸம்ப

விப்பதற்கு சாதகமென்றும், சிலர் சொல்லிக்கொண்டிருக்கும் நிந்தா வசனங்களைச் செவியுற்று பாரபவாதத்தில் மிகுந்த பொருமையையும். பயத்தையுமடைந்து எவ்வித சிரமத்தை எடுத்துக்கொண்டாவது எப்படியானால் ஸ்திரீகளிடத்தில் வ்யபிசாரமென்ற அபவாத தோஷம் சிறிதும் அணுகமாட்டாதோ அவ்விதம் அத்தோஷத்தை அடியோடு கண்டித்துவிட வேண்டுமென்று திடநிர்ணயத்துடன் ஸ்திரீகள் விஷயத்தில் அதிக நியமங்களையும், அநேக நிர்ப்பந்தங்களையும், கல்பித்து வரைந்துவிட்டனர். ஆகவே ஆதிகாலத்தில் ஸ்திரீகளுக்கு வ்யபிசாரமென்பது தோஷமாகக் கருதப்படவில்லை" என்று இவ்விதம் ஸ்திரீகளுக்கு ஸ்வதந்திரப் பிரசாரம் முன்னிருந்ததாகவும், அதில் தோஷமென்ற அறிவை பிறகு காலக்ரமமாகத்தான் நமது முன்னோர்கள் அடைந்தார்களென்றும் கூறுவதெல்லாம் இக்காலத்தியவர்களின் துர்வாஸனானுகுணமாகிய கல்பனாமாத்திரமேயன்றி வேறல்ல; ஏனென்றால் சுருதிஸ்மிருதி புராணம் முதலிய பிரமாணங்களையும், பெரியோர்கள் வார்த்தைகளையும், சிறிதும் லக்ஷ்யம்பண்ணாமல் உதறி எறிந்துவிட்டுத்தமது புத்திக்குத் தோன்றிய காரியங்களையெல்லாம் நற்காரியங்களென்று முதலில் செய்யவாரம்பிப்பதும், பின்பு அக்காரியங்களில் ஏதாவது கெடுதல் சம்பவிக்கும்பக்ஷத்தில் நற்காரியங்களல்லவென்று அவைகளையனுஷ்டிக்காமல் பரித்யாகம் செய்துவிடுவதும், விவேகமற்ற சிற்றறிவுள்ள பாமரர்களுடைய ஸ்வபாவமாகுமே ஒழிய ஸர்வேசுவரனுக்குச் சமமான மஹாமஹிமைவாய்ந்த, ஸர்வக்யர்களாகிய மனு, வியாசர், யாக்ஞவல்கியர், வஸிஷ்டர் முதலிய மஹரிஷிகளுக்கு இவ்வித ஸ்வபாவம் இருந்ததாக ஸம்சயத்திற்கு அவகாசமில்லை. ஸம்சயப்படுவதற்கும் நியாயமில்லை என்பது நிச்சயம்.

கார்யாகாரிய விவேக ஞானமற்ற, பக்ஷி, மிருகம், முதலிய திர்யக்ஜாதிகளுக்கன்றோ இவ்வித ஸ்வபாவம். மனு முதலிய மஹரிஷிகளோவென்றால் மஹாத்மாக்கள், முக்காலத்தையுமறிந்தவர்கள், தர்மதத்துவங்களைப் பிரத்யக்ஷமாய்க் கண்டறிந்தவர்கள், ஸர்வேசுவரனுடைய அனுக்ரஹவிசேஷத்தாலும், தம்முடைய பூர்வபுண்ணியகர்ம மஹிமையாலும், க்ஞானக்கிரியாசக்திகளையளவின்றி அடைந்தவர்கள், கருணை, சாந்தம், முதலிய நற்குணரத்னங்களுக்கு ஸமுத்திரம்போன்றவர்கள். அவர்கள் நம்மிடம்

கருணை கூர்ந்து சுருதிஸ்மிருதிகளினின்றும் வெளியாகும், ஸநாதன தர்மதத்துவங்களை பக்ஷபாதமின்றியும், ராகத்வேஷமில்லாமலும் நமக்கு உபதேசிக்கின்றனர். இத்தகைய மஹிமைவாய்ந்திருக்கும் மனு முதலிய மகரிஷிகளை நீசபுத்தியுள்ள நமக்கு ஸமானமாகவே ஒப்பிடுவது மிகவும் அஸங்கதமாகும். விளையாட்டிற்காவது அம்மஹான்கள் சாஸ்திரநிஷித்த காரியங்களைப் பிறருக்கு உபதேசிக்கமட்டார்கள். "தர்மசாஸ்திரமென்னும் ரதத்திலேறிக்கொண்டும்,வேதமென்னும் கத்தியைக்கையில்வைத்துக்கொண்டும் (நாஸ்திகர்களை ஜயிப்பதற்காக யுத்தவீரர்களாக) பிரகாசிக்கும், மஹரிஷிகள், விளையாட்டாகக் கூறுவதெல்லாம் மேலான தர்மமேயாகும்" என்றல்லவா ஸ்மிருதிகள் கூறுகின்றன. ஆகவே அவர்கள் அதர்மத்தை தர்மமாகவும், தர்மத்தை அதர்மமாகவும் உபதேசம் செய்யமாட்டார்கள்.

அன்றியும் இவ்விதம் குதர்க்கம்செய்து வரும் தர்க்கநிபுணர்களை ஒரு கேள்விகேழ்க்கவேண்டும். ஸ்திரீகளுடைய வ்யபிசார தோஷ விஷயத்தில் உங்களுடைய ஊஹஸாமர்த்தியம் செல்வது போல் எந்த விஷயங்களில்தான் இவ்விதம் ஊஹம் செய்வதற்கு அவகாசமில்லை. களஞ்ச பக்ஷணம், (கஞ்சாத்தின்னல்) கட்குடித்தல் மாம்ஸமுண்ணுதல், பிராம்மணியுடன் புணர்தல், முதலிய எல்லா நிஷித்தகாரியங்களிலுமே இவ்விதம் ஊஹித்துக்கொள்வதற்கு அவகாசமுண்டே: அதவாது ஆதிகாலத்தில் மஹரிஷிகளும் கட்குடித்தல் முதலிய நிஷித்தகாரியங்களையெல்லாம் அனுஷ்டித்துக் கொண்டுதானிருந்தார்கள். பிறகு காலக்கிரமமாக அக்காரியங்களில்சில தோஷங்களிருப்பதாக அனுபவத்தைக் கொண்டு அறிந்தவுடன், அக்காரியங்களை அதுமுதல் அனுஷ்டிக்காமல் விட்டதுமன்றி விடுத்து பிறரையும் அனுஷ்டிக்கவொட்டாமல்தடுப்பதற்காக தாமியற்றிய தர்மசாஸ்திரங்களில் நிஷித்தமொன்று கூறவும்ஆரம்பித்துவிட்டார்கள்என்றிவ்வாறுக நிஷித்தகாரியங்களெல்லாவற்றிலும்தங்களுடையகல்பனைசக்திபிரவேசிக்குமன்றோ? தவிர நிஷித்தகாரியங்களில் மட்டிலும் தங்களுடைய கல்பனைசக்திக்கு பிரவேசமென்பது மாத்திரமில்லை. அனுஷ்டிக்கத்தக்கவைகளாக வேதங்களில் விதிக்கப்பட்டிருக்கும் காரியங்களிலுங்கூட இவ்வாறு தங்களுடைய கல்பனைசக்தியின்பிரவேசத்திற்குஇடமுண்டு.

रौद्रश्वेतश्च मैत्रश्च तथा सारगतस्स्मृतः ॥ ६४ ॥

सावित्रो वैश्वदेवश्च गान्धर्वः कुतपस्तथा ।
रौहिणस्तिलकश्चैव विभागो निरृतिस्तथा ॥६५॥

शंबरो विजयश्चैव बोधः पञ्चदशस्स्मृतः ।

இன்னும் 'ரௌத்ரம், ச்வேதம், மைத்ரம், ஸாரகதம், ஸாவித்ரம், வைச்வதேவம், காந்தர்வம், குதபம், ரௌஹிணம், திலகம் விபாகம், நிருருதி, சம்பரம், விஜயம் போதம்' எனப்பதினைந்துபிரிவுகளாகவும் நிருபிக்கப்பட்டிருக்கின்றது. (65½)

दिवसश्च यदा राम वृद्धिं समधिगच्छति ॥६६॥

तदाश्रितमुहूर्तानां तदा वृद्धिः प्रकीर्तिता ।
दिनवृद्धिर्यथाराम तेषां ह्रानिस्तथा भवेत् ॥६७॥

तदाश्रितमुहूर्तानां ह्रानिर्ज्ञेया तदा तदा ।
इति पञ्चदशानांच मुहूर्तानां यथायथम् ॥६७॥

वृद्धिक्षयादिकं पूर्वैरन्यत्रापि प्रपञ्चितम् ।

அஹர்மானம் க்ஷயவிருத்திகளுக்கொப்ப இந்தப்பிரிவுகளின் அளவிற்கும் க்ஷயவிருத்தி அறிந்துகொள்ளல்வேண்டுமென்றும் மற்றோரிடத்திலும் கூறியிருத்தலைக் காண்கின்றோம். (68½)

इत्येवं बहुधा भक्ते कावा स्यादापराह्णिकी॥ ६८॥

இவ்வாறு அமைகின்ற பலவிதமான பிரிவுகளில் அபரான்னமென்பது எது? (69)

तिथिः श्राद्धेषु विहिता महत्त्वं वा कुतो मतम् ।
द्वेधा त्रिभागपक्षेच दिनार्धव्यापनं यदा ।
अधिकं स्यात्तिथेस्तत्र श्राद्धानुष्ठानमापतेत् ।
नचैतद्युज्यते लोके शिष्टाचारविरोधतः ॥७१॥

அதை வியாபிக்கின்ற சிராத்தத்திற்குரிய திதி யாது? அத் திதியின் அதிகவ்யாப்தி எவ்வாறு? இரண்டு பிரிவுகளை ஒப்புக் கொள்வோமாகில், இரு பகுதிகளுக்குள் எதில் திதியின் அதிக வ்யாப்தி அமைகின்றதோ அதில் சிராத்தம் அனுஷ்டிக்கநேரிடு

கிறது. சிஷ்டாசாரத்துடன் முரண்படுதலால் இதில் விரும்பத் தக்கதல்ல. (71)

अपराह्णापराह्णत्वं दिवसस्य मनुस्मृतम् ।
मन्वर्थविपरीता तु यास्मृतिस्सा न शस्यते ॥७२॥

यदि त्रेधा विभागस्य श्रुतिप्रामाण्यगौरवात् ।
शातातपस्मृतत्वाच्च समाश्रयणमिष्यते ॥ ७३ ॥

பகலின் பிற்பகுதியே அபரான்னமென மநு கூறியுள்ளார். மநுவின் கோட்பாட்டிற்கு விரோதமான ஸ்மிருதி மேலானதல்ல.

ச்ருதியின் ஆதாரத்தாலும் சாதாதபரின் வசனத்தாலும் மூன்று பிரிவுகளை ஒப்புக்கொள்வோமாகில், (73)

तदाचाह्नस्तृतीयांशे तिथ्याधिक्यन्तु यद्दिने ।
तत्रैव मासिकादीनां अनुष्ठानं प्रशस्यते ॥७४॥

அப்பொழுதும் பகற்பொழுதின் மூன்றுவது பாகத்தைத் திதி பெரும்பாலும் வ்யாபிக்கிற தினத்தில் மாஸிகமோ ஆப்திகமோ அநுஷ்டிக்க நேருகிறது. (74)

तच्चपूर्ववदेवस्यात् शिष्टगोष्ठीबहिष्कृतम् ।
यदि श्रौतापराह्णादेः स्थूलत्वात्तदपेक्षया ॥ ७५ ॥

अत्र्युक्तस्यापराह्णस्य सौक्ष्म्यादादरणं मतम् ।
तत्रापि तुल्यएवायं दोषः पूर्वेषु चोदितः ॥ ७६ ॥

இதுவும் முன்போலவே சிஷ்டர்களால் ஒப்புக்கொள்ளப் பட்டதல்ல. ச்ருதியில் சொல்லப்பட்ட ஸ்தூலமான அபரான்னத்திலும் அத்ரி முனிவரால் உரைக்கப்பட்ட அபரான்னம் ஸூக்ஷ்மமுள்ளதென்று அத்ரியின் விபாகங்களைக் கைக்கொண்டால், முந்தியுரைத்த குற்றம் நீங்கவில்லை. (76)

सत्यंशैकाधिका नाड्यो यदि पूर्वदिने तिथेः ।
तथापरस्मिन् दिवसे नाड्यः परतिथेरपि ॥७७॥

तदा पूर्वदिने श्राद्धं कार्यमापद्यते यतः ।
नदृश्यते तथालोके शिष्टानुष्ठानमञ्जसा ॥ ७८ ॥

ஒரு திதி முதல் நாள் மூன்றிலொரு பங்குடன் கூடிய ஒரு நாழிகை (1⅓ நாழிகை) இருக்குமாயின், மறு திதியும் மறு நாள் அதே அளவுள்ள நாழிகைகளை வியாபித்து நிற்கும் காரணத்தால் சிராத்தத்தை முதல் நாள் செய்யும்படி நேரிடும்; இது வழக்கத்திற் காணப்படவில்லை. (78)

परस्मिन्नेव दिवसे सद्भिश्श्राद्धं तदाहतम् ।
तस्मात्सर्वेषु पक्षेषु शिष्टाचारविरोधतः ॥७९॥
स्यात्पञ्चधा विभागस्य ग्राह्यत्वमितिचेत्तदा ।
श्रुतिस्मृतिविरुद्धस्याप्याचारस्य प्रमाणता ॥८०॥
महद्भिरभ्युपेया स्यात् साच तैरेवनेष्यते ।

இவ்வித நிலமையில் சிராத்தம் மறுநாளே அனுஷ்டிக்கப்படுகிறது. ஆகவே முற்கூறிய முறைகளெல்லாம் சிஷ்டாசாரத்துடன் முறண்படுகின்றனவென்று, ஐந்து பிரிவுகளை ஒப்புக்கொள்வோமாகில், 'ச்ருதஸ்மிருதிகளுக்கு விரோதமுள்ளதாகவிருப்பினும் சிஷ்டாசாரம் போதிய ஆதாரமாயது' என்பதைப்பெரியோர் அங்கிகரிக்கவேண்டியிருக்க, அவர்களே அவ்வாதாரத்தை விரும்பாமல் விட்டனர். (80½)

इत्येवं बहुधायातैर्दोषैराकुलताङ्गते ॥८१॥
सत्कुलेच वयं ब्रूमो व्यासपक्षानुधावनात् ।
मनोराप्तिर्यथायद्वै किञ्चनेति श्रुतीरिता ॥ ८२॥
· तदास्यापि सहोवाच व्यास इत्यादिनेरिता ।
शिष्टानुष्टानसहिता व्यासोक्तिस्तु त्रयीमतम् ॥८३॥

இவ்வாறு ஸம்பவிக்கிற பலவிதக் குற்றங்களால் நற்குலம் குழப்பமடைந்து நிற்க, வ்யாஸபக்ஷத்தையே கைப்பற்றி யாம் கூறுவோம்.

'மனு உரைப்பதெல்லாம் மருந்து' என்று ச்ருதி கூறியவாறே 'ஸஹோவாச வ்யாஸ:' முதலிய ச்ருதிவாக்கியங்களால் சிஷ்டானுஷ்டானத்திற்கிசைந்த வியாஸமதமும் வேதத்திற்குச் சம்மதமானது. (83)

विशेषतो व्यनक्तीति नास्य वेदविरुद्धता ।
आंधिक्यमपराह्णिकया व्याप्तेर्न श्रुतिचोदितम् ॥८४॥

'வேதங்களை விசேஷமாக் விளக்குகிறவர்' என்பதால் 'வ்யாஸர்' எனப்பெயர் கொண்டவரது கருத்து வேதத்துடன் ஒரு போதும் முறண்படாது. திதிக்கு அபரான்னத்தில் அதிகவ்யாப்த்தியை ச்ருதி கூறவில்லை. (84)

किंतु तत्कालसंबन्धमात्रं श्राद्धस्य चोदितम् ।
येनानेन विरोधस्स्यात् शिष्टाचारस्य दृश्यताम् ॥८५॥

சுருதியுரைத்தென்னவெனில் சிராத்தத்திதிக்கு அபரான்ன ஸம்பந்தம் இருக்கவேண்டும் என்பது மாத்திரமே. இம்முறையில் எவ்வித முறண்பாடுமில்லை என்பதைக்காண்க. (85)

किंचश्रुतेः प्रधानाङ्गं ज्योतिषं वेदलोचनम् ।
प्रबलंचान्तरंगत्वात्तत्तत्कालविनिर्णये ॥८६॥

மேலும், வேதபுருஷனுக்குக் கண்ணெனத்தக்க சோதிடம் ச்ருதிக்கு முக்கியமான அங்கம். பல கருமங்களுக்குரிய காலங்களை நிச்சயிப்பதற்குச் சோதிடமே போதிய ஆதாரமாகும். (86)

उक्तस्तत्रहि गर्गाद्यैः शिष्टाचारानुरोधतः ।
पञ्चांशतां समालंब्य दिनस्य तिथिनिर्णयः ॥८७॥

மற்றவை பல காரணங்களை அபேட்சிக்காமல் நிற்றலால் சோதிடம் எல்லாவற்றினும் அதிக உறுதியுள்ள ஆதாரமாகும். சோதிடத்திற் சிறந்த அறிவாளர்களான கர்க்கர் முதலானோர் சிஷ்டாசாரத்தை அனுஸரித்து அஹர்மானத்தை ஐந்து பங்குதளாகப் பிரித்தே திதிகளை நிச்சயித்திருக்கின்றனர். (87)

अह्नोक्षांशे द्विधावेद निघ्ने पूर्वतिथिं त्यजेत् ।
त्रिघ्नं परतिथौ शोध्यं अधिकं यत्र सा तिथिः ॥८८॥

அஃது பின் வருமாறு: அஹர்மானத்தை ஐந்துபங்கிட்டுக் கிடைக்கின்ற ஈவை நான்காற் பெருக்குக. இக்குணகாரத்தினின்றும் (பெருக்கிவந்த தொகையினின்றும்) முந்திய திதி முடிவு பெறும் நாழிகை விநாடிகளைக் கழித்து வைத்துக்கொள்க. பிறகு மறுபடியும் முன்கண்ட அஹர்மானத்தின் ஐந்திலொன்றை மூன்ருர் பெருக்கிக்கண்டத்தொகையினின்றும் மறுதிதி முடிவுபெறும் நாழிகைகளைக்கழித்துவைத்துக்கொள்க. இவ்விருதொகையிலும் பெரிது அன்றுள்ள திதியைக் குறிக்கின்றது. (88)